**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : திருமதி **V. பார்கவி, B.A.B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, பிலவ வருடம் பங்குனி மாதம் 01-ம்நாள்

------

**அசல் வழக்கு எண். 63/2012 -ல் இடைமனு எண். 02/2021**

1. கிருஷ்ணம்மாள் ( இறந்தார்) ..1-ம் மனுதாரர்/வாதி
2. இராமகிருஷ்ணன் சார்பாக அவரின் அதிகாரம் பெற்ற முகவர் சுவாமிநாதன் மூலமாக ..2-ம்மனுதாரர்/ 2-ம் வாதி
3. சீத்தா ..3-ம் மனுதாரர்/ இறந்த 1-ம் வாதியின் வாரிசுதாரர்/ வழக்கில் சேர்க்க வேண்டிய தரப்பினர்

...எதிர்...

1. பாலசுந்தர்
2. பாபு ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 09.03.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்களும், 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு ஆர். ஆத்மநாதன் அவர்களும் ஆஜராகியும், 2-ம் எதிர்மனுதாரரை அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் எனது பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

3-ம் மனுதாரரை இறந்த 1-ம் மனுதாரர்/1-ம் வாதியின் வாரிசாக சேர்க்கக் கோரி மனுதாரர்/ 2-ம் வாதியால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 22 , விதி 3 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்

மனுதாரர் அசல் வழக்கின் 2-ம் வாதி. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் மீது விளம்பல் பரிகாரம் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1-ம்மனுதாரர்/1-ம் வாதி கடந்த 10.02.2017-ம் தேதியன்று இறந்துவிட்டார். இறந்த 1-ம் வாதிக்கு 2-ம் மனுதாரர் 3-ம் மனுதாரர் மற்றும் சிவா ஆகியோர்கள் வாரிசுகளாவர்கள்.

அவர்களில் சிவா கடந்த 04.07.2007 அன்று இறந்துவிட்டநிலையில் இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் ஆவார்கள். இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்களைத்தவிர வேறு வாரிசுகள் கிடையாது. அவர்களில் 2-ம் மனுதாரர் ஏற்கனவே வழக்கில் தரப்பினராக உள்ள நிலையில் இறந்த 1-ம் வாதியின் மற்றொரு வாரிசான 3-ம் மனுதாரரை இறந்த 1-ம் வாதியின் வாரிசாக சேர்க்கக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. <u>1-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>

மனு சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. 1-ம் வாதி 10.02.2017 அன்று இறந்துவிட்டார் என்பது உண்மை. இறந்த 1-ம் வாதி- சிவசிதம்பரம் தம்பதியினருக்கு ராமகிருஷ்ணன், சிவா, சீத்தா ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் ஆவர். இறந்த 1-ம் வாதியின் மகனான சிவா கடந்த 04.07.2007-ல் இறந்துவிட்டார். 1-ம் வாதியின் மகனான சிவாவுக்கு கலா என்ற மனைவியும், 2-ம் பிரதிவாதி பாபு என்ற மகனும் வாரிசுதாரர்கள் ஆவார்கள். தற்போது கலாவும் இறந்துவிட்டார். எனவே 1-ம் வாதிக்கு இறந்த சிவாவின் மகனான 2-ம்பிரதிவாதி மட்டுமே வாரிசுரிமை சட்டப்படி வாரிசுதாரர் ஆவார். இறந்த 1-ம் வாதிக்கு 2-ம் பிரதிவாதியும் ஒரு வாரிசாவார். இறந்த 1-ம் வாதிக்கு உரிய வாரிசை சேர்த்து இந்த மனு தாக்கல் செய்யாததால் இந்த மனு நிலைநிற்கத்தக்கதல்ல. இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்களைத் தவிர வேறு வாரிசுகள் யாரும் கிடையாது என்பது தவறு. 1-ம் வாதியின் சொத்துக்களுக்கு 2-ம் பிரதிவாதியும் உரிமையாளர் ஆவார். இந்த வழக்கில் 3-ம் மனுதாரர் சீத்தாவை வாதியாக சோக்க இயலாது. எனவே மனுவை 1-ம் எதிர்மனுதாரரின் செலவுத்தாகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4.. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

மனுதாரர்/2-ம் வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கானது 1,2 மனுதாரர்கள்/ 1,2 வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்பல் பரிகாரமும் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரமும கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது 1-ம் வாதி கடந்த10.02.2017 அன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த 1-ம் வாதிக்கு இம்மனுவின் 2,3 மனுதாரர்கள் மற்றும் சிவா ஆகியோர்கள் வாரிசுகள் என்றும், அவர்களில் சிவா கடந்த 04.07.2007

அன்று இறந்துவிட்டார் என்றும், எனவே இறந்த 1-ம் வாதிக்கு இம்மனுவின் 2,3 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் என்றும், 2-ம் மனுதாரர் ஏற்கனவே வழக்கில் தரப்பினராக உள்ளநிலையில் 3-ம்மனுதாரரை இறந்த 1-ம் வாதியின் வாரிசாக சேர்க்க வேண்டுமென மனுதாரர்கள் தரப்பில் வாதம் செய்யப்பட்டது.

7. முதல்எதிர்மனுதாரர்/ முதல் பிரதிவாதி தரப்பில் இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் மற்றும் சிவா என்பவரும் வாரிசுகள் என்றும், அதில் சிவா 04.07.2007 அன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த 1-ம் வாதியின் மகனான சிவாவுக்கு கலா என்ற மனைவியும், மகனான 2-ம் எதிர்மனுதாரரும் வாரிசுகள் என்றும், இறந்த 1-ம் வாதிக்கு 2-ம் பிரதிவாதியும் வாரிசுரிமை சட்டப்படி வாரிசுதாரர் என்றும், இறந்த 1-ம் வாதிக்கு உரிய வாரிசை சேர்த்து இம்மனு தாக்கல் செய்யாததால் இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், இறந்த 1-ம் வாதியின்சொத்துக்களுக்கு 2-ம் பிரதிவாதியும் உரிமையாளர் ஆவார் என்றும், இந்த வழக்கில் 3-ம் மனுதாரரை வாதியாக சோக்க சட்டப்படி இயலாது என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டது.

8. இம்மனுவில் 2-ம் எதிர்மனுதாரர்/ 2-ம் பிரதிவாதி அசல் வழக்கிலும் இம்மனுவிலும் தோன்றாத்தரப்பினராக உள்ளார்.

9. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. 2-ம் மனுதாரர்/ 2-ம் வாதி தரப்பில் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது 1-ம் வாதி கடந்த 10.02.2017 அன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த 1-ம் வாதிக்கு 3-ம்மனுதாரர் சீதாவும் ஒரு வாரிசுதாரர் என்றும், எனவே இறந்த 1-ம்மனுதாரர்/1-ம் வாதியின் வாரிசாக 3-ம்மனுதாரரை வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டுமெனவும் அதன்பொருட்டு தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென இம்மனுவில் கோரப்பட்டுள்ளது. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் இறந்த 1-ம் வாதிக்கு 2-ம் பிரதிவாதியும் ஒரு வாரிசு என்றும், இறந்த 1-ம்வாதியின் வாரிசாக 3-ம் மனுதாரரை சேர்க்க முடியாது என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதம் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1-ம் வாதி கடந்த 10.02.2017 அன்று இறந்துவிட்டார் என்பதைப்பொறுத்து, இறந்த 1-ம் வாதிக்கு 3-ம்மனுதாரர் வாரிசு என்பதைப்பொறுத்தும் 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் செய்யப்படவில்லை. மேலும் 3-ம் மனுதாரரை 1-ம் வாதியின் வாரிசாக சேர்க்க முடியாது என்று கூறியுள்ள 1-ம் எதிர்மனுதாரர் ஏன் சேர்க்க முடியாது என்பதற்கான சரியான,நியாயமான விளக்கத்தைக் கூறவில்லை. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் இறந்த 1-ம்

வாதிக்கு 2-ம் பிரதிவாதியும் ஒரு வாரிசு என்று கட்சி செய்யப்பட்டுள்ளது. இறந்த 1-ம்வாதியின் வாரிசாக 2-ம் பிரதிவாதி இந்த வழக்கில் ஏற்கனவே தரப்பினராக உள்ள நிலையில் இறந்த 1-ம் வாதியின் வாரிசாக 3-ம்மனுதாரரை சேர்க்க வேண்டுமெனக்கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து அதன்பின்னர் வழக்கில் தீர்வு காண்பதே இறுதியான தீர்வாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 3-ம் மனுதாரரை இந்த வழக்கில் தரப்பிரனராக சேர்ப்பதால் 1-ம் எதிர்மனுதாரருக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்நிலையில் அசல் வழக்கில் தீர்வு காண்பதற்கு 3-ம் மனுதாரர் தேவையான தரப்பினர்கள் என்பதால் இறந்த 1-ம் வாதியின் வாரிசாக 3-ம் மனுதாரரை சேர்க்க வேண்டுமென்ற மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கத்தக்கதாகும் என்றும், அதன் பொருட்டு 2-ம்மனுதாரர்/2-ம் வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றும், மனுவின் தன்மை கருதி இம்மனுவின் செலவுத்தொகையை இருதரப்பினரும் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

10. முடிவில், இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 15 -ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

பின் இணைப்பு

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | - இல்லை- |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | -இல்லை- |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | -இல்லை- |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | - இல்லை- |

மா.உ.நீ

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 63/2012-ல்
இடைமனு எண். 02/2021
நாள் -15.03.2022.